அ.வ.எண்.111/2014 – 09.12.2019 – வா.சா.1 பரமேஷ்வரன்

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–

பணம் என் வீட்டில் வைத்து கொடுத்தேன். பிரதிவாதி ஈரோட்டில் குடியிருக்கிறார். பெருந்துறையில் வைத்து நான் பணம் கொடுக்கவில்லை. பெருந்துறையில் வைத்து பணம் கொடுத்ததாக கூறியிருந்தால் அது தவறு. பணத்தை பெற்றுக்கொண்டு இல்லை என்று எதிர்வாதத்தில் பிரதிவாதி கூறுகிறார். புரோநோட்டில் அவருடைய கையெழுத்து இல்லையெனறும் தெரிவித்துள்ளார். அறிவுசார் ஆய்விற்கு கையெழுத்தை நான் அனுப்பி பரிசோதிக்கவில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிக்கு அறிவிப்பு கொடுக்கவில்லை, நேரில் கேட்டேன். பிரதிவாதியை சந்தித்து எந்த தேதிகளில் கேட்டீர்கள் என்று வழக்கில் தெரிவிக்கவில்லை என்றால் சரி. அவசரமாக வழக்கு தாக்கல் செய்யவேண்டிய தேவை இல்லாதபோது எதனால் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் நேரில் கேட்டேன். வேறு குறிப்பிட்ட காரணம் இல்லை. உங்களுடைய சகோதரர் துரைசாமி உங்களுடன் விசாரணைக்கு வருகிறார் என்றால் இன்று வரவில்லை அவ்வப்போது வருவார். மதனும் உங்களுடன் நீதிமன்ற விசாரணைக்கு வந்தாரா என்றால் ஒருமுறை வந்தார். வா.சா.ஆ.1 புரேநோட்டில் ஒட்டப்பட்டுள்ள 2 முத்திரை வில்லைகளில் ஒரு வில்லையில் மட்டுமே பிரதிவாதியின் கையெழுத்து இருக்கிறது என்றால் சரி. வா.சா.ஆ.1ல் இடதுகைபெருவிரல் ரேகை வைப்பதற்குரிய தனி பகுதி இருக்கிறது,அதில் கைரேகை வாங்கவில்லை, கைரேகை வாங்காமல் இருந்ததற்கு குறித்த காரணம் ஏதும் உள்ளதா என்றால் ஏற்கனவே 2,3 முறை பணம் கொடுத்து அவர்திரும்ப கொடுத்துள்ளதால் வாங்கவில்லை. எந்தெந்த தேதிகளில் பிரதிவாதி பணத்தை உங்களிடம் பெற்றுக்கொண்டு மீண்டும் செலுத்தினார் என்றால் ஞாபகம் இல்லை, அதற்குரிய ஆவணங்கள் இலலை என்றால் சரி. ஏற்கனவே உங்களுக்கும் பிரதிவாதிக்கும் பணம் கொடுத்து வாங்குவது இருந்தது என்று

வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. இடதுகை பெருவிரல் ரேகை வாங்குவதற்கு யாரும் கூறினார்களா என்றால் இல்லை. வா.சா.ஆ.1ல் உள்ள கையெழுத்தும் குறியீடு செய்யப்படாத 3.2.15 தேதியிட்ட கிரய பத்திரத்தில் பிரதிவாதி விற்பனையாளராக இருந்து செய்து கொடுத்த ஆவணத்தில் உள்ள கையெழுத்தை சாட்சியிடம் கேட்டு அந்த கையெழுத்திற்கும் வா.சா.ஆ.1 கையெழுத்திற்கும் இடையே வித்தியாசம் உள்ளதா என்றால் எனக்கு தெரியவில்லை என்று சாட்சி தெரிவித்தார். பணம் பிரதிவாதி உங்களிடம் எப்போது கேட்டார் என்றால் 10 தினங்களுக்கு முன்பாக என்னிடம் கேட்டார். ஈரோடு வந்திருந்த சமயத்தில் கேட்டார். 10 நாட்கள் கழித்து தருவதாக நான் தெரிவித்தேன். 10 தினங்கள் கழித்து அவரை வரவழைத்துபணத்தை கொடுத்தேன். 10 தினங்களுக்கு முன்பு அவர் பணம் கேட்டபோது ரூ.4 லட்சம் உங்களிடம் இருக்கவில்லை என்றால் குறைவாக இருந்தது. எவ்வளவு குறைவாக வைத்திருந்தேன் என்று தற்போது ஞாபகம் இல்லை. 20ம் தேதி நான் பணம் கொடுத்தேன். அப்போது நேரம் 10.30 மணி இருந்திருக்கும். அப்போது யார் யார் வந்தார்கள் என்றால் கணபதி, பாண்டு எழுதிய பாஸ்கரன், அப்பாஸ் எல்லோரும் வந்தார்கள். சாட்சிகளை கணபதி அழைத்து வந்தார். பணம் நீங்கள் கொடுத்தபோது எதனால் சாட்சியை அவர் அழைத்து வந்தார் என்றால் ஏற்கனவே அவர் பணம் வாங்கியிருக்கிறார். சாட்சி என்னுடைய அண்ணன் மகன். சாட்சி பரிந்துரைத்ததன் பேரில்தான் நீங்கள் பணம் கொடுத்தீர்கள் என்றால் சரி. பணம் வாங்குவதற்கு எல்லோரும் ஒன்றாகத்தான் வந்தார்கள், தனித்தனியாக வரவில்லை. புரோநோட் எழுதுவதற்கு ஸ்டாம்ப், பாண்டு பேப்பர் எல்லாம் பிரதிவாதி எடுத்து வந்தார். பிரதிவாதி உங்களிடம் கடன் வாங்குகிறார், எதனால் அவர் பாண்டு எழுதவேண்டும் என்றால் நான் வாங்கி வரச்சொன்னேன் அவர் வாங்கி வந்தார். நான் கடன் கொடுத்து வாங்கும் தொழில் செய்யவில்லை. புரேநோட்டின் வாசகங்களை நானும் கணபதியும் கூறினோம். எந்த

பகுதிக்குரிய வாசகங்களை அவர் கூறினார் என்றால் தேதி, முகவரி கூறினார், என்னுடைய முகவரியை நான் தெரிவித்தேன். தொகை, வட்டி விவரங்களை நாங்கள் பேசி வைத்தபடி நானும் கூறினேன், அவரும் கூறினார். பாண்டு நேரடியாக எழுதப்பட்டது, பிரதி எதுவும் எடுக்கப்படவில்லை. சாட்சி பாஸ்கருக்கு பாண்டு எழுதி பழக்கம் உண்டு என்றால் சரி. பாண்டு எழுதிய பிறகு அவர் கையொப்பமிட்டு என்னிடம் கொடுத்தார், சாட்சிகளும் கையெழுத்திட்டார்கள். பின்னிட்டு பணம் ரூ.4 லட்சம் ரூ.1000/— கட்டுகளாகக் கொடுத்தேன். பாண்டு எழுதி முடிக்க சுமார் 20 நிமிடம் ஆனது. என் வீட்டில் பாண்டு எழுதியபோது வேறு யார் யார் இருந்தார்கள் என்றால் வேறு யாரும் இருக்கவில்லை. வீட்டில் ஆசாரத்தில் வைத்து எழுதப்பட்டது. நீங்கள் கூறுவது போல் பாண்டு அன்றைய தினம் எழுதப்படவில்லை, பிரதிவாதிக்கு நீங்கள் பணமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஜி.கே.பழனிச்சாமியின் தூண்டுதலின் பேரில் அவரது சகோதரியின் மகன் பாஸ்கரனை வைத்து புரோநோட்டை தயார் செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 புரேநோட்டில் பிரதிவாதியின் கையெழுத்து இல்லை, பாஸ்கரை வைத்து புரோநோட் தயாரிக்கப்பட்டு பிரதிவாதியின் கையெழுத்து போலியாக இடப்பட்டு, பொய் சாட்சிகள் வைத்து வழக்கு தாக்கல் செய்து பொய்யாக சாட்சியமளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. புரோநோட்டில் உள்ள கையெழுத்து பிரதிவாதியுடையதா என்று அறிவுசார் ஆய்விற்கு அனுப்ப உங்களுக்கு ஆட்சேபணையில்லை என்றால் சரி. பாஸ்கர் மீதுகுற்றவியல் வழக்குகள் இருப்பது பற்றி எனக்கு தெரியாது. பணம் கொடுக்கப்பட்ட தமிழ் தேதி ஞாபகம் இல்லை. இந்த வழக்கு தள்ளுபடியாகத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.